<u>கூடுதல் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம். புதுச்சேரி</u>

முன்னிலை: திரு. பெ.க. சிவக்குமார்
நீதிபதி
மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம்
புதுச்சேரி

<u>மோ.வா.இ.அ.ம. எண்: 300/2020</u>
(CNR No.PYPY04-001112-2020)

2022ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாள் திங்கட்கிழமை

திரு. பரசுராமன் (45),
த/பெ திரு. பெரியண்ணசாமி,
எண்.19, ஐயனார் கோவில் தெரு,
ஜி.என்.பாளையம், வில்லியனூர்,
புதுச்சேரி. .... மனுதாரர்

-இடையே-

1. திரு. சௌந்தரராஜன்,
   த/பெ திரு. இராமச்சந்திரன்,
   எண்.3, பிள்ளையார் கோவில் தெரு,
   கீழ்அக்ரஹாரம், புதுச்சேரி.

2. பொது மேலாளர்,
   HDFC - ERGO பொதுக்காப்பீட்டு நிறுவனம்,
   ஆர்.ஆர்.டவர்ஸ், 2வது மாடி, எண். 94/95,
   டி.வி.கே தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை,
   தமிழ்நாடு. ... எதிர்மனுதாரர்கள்

இந்த வழக்கானது 18.04.2022 இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. கண்ணன் அவர்களும், 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவரைப் பொறுத்து ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. இரவிக்குமார் அவர்களும் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றத்தால் வழங்கப்படும்.

உத்தரவு

1. மனுவின் சுருக்கம்:

கடந்த 06.10.2010 அன்று மாலை 5.45 மணியளவில் மனுதாரர் PY-01-AK-8016 என்ற இரு சக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றுகொண்டிருந்தபோது, 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான PY-01-BE-1865 என்ற காரை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியதில் மனுதாரர் கீழே விழுந்து அவருக்கு எலும்புமுறிவுகள் உள்ளிட்ட கொடுங்காயங்கள் ஏற்பட்டது. மனுதாரர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். விபத்து சமயம் மனுதாரர் கொத்தனாராக வேலை பார்த்து மாதம் ரூ.15,000 சம்பாதித்து வந்தார். மனுதாரருக்கு ரூ.20,00,000/- இழப்பீடாக வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டும்.

2. 2ம் எதிர்மனுதாரரின் பதிலுரையின் சுருக்கம்:

விபத்து சமயம் மனுதாரர் தலைக்கவசம் அணியவில்லை. மனுவில் உரைக்கப்பட்டுள்ளதுபோல் விபத்தேற்பட்டு மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டதென்பதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவரல்ல. மனு தள்ளுபடி செய்யத்தக்கது.

3. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய முக்கிய பிரச்சினைகள் பின்வருமாறு-

(அ) இவ்வழக்கு விபத்து 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டதா?

(ஆ) மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? இழப்பீடு பெறத்தக்கவரெனில் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர்?

(இ) மனுதாரருக்கு எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர்?

4. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் எடுக்கவேண்டிய அனைத்து எதிர்வாதங்களையும் 2ம் எதிர்மனுதாரர் எடுக்க அனுமதிக்க வேண்டி மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது.

5. மனுதாரர் தரப்பில் மனுதாரர் சாட்சியாக விசாரிக்கப்பட்டு 10 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவோ சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவோ இல்லை. மருத்துவக்குழுவின் அறிக்கை நீதிமன்ற சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>6. இவ்வழக்கு விபத்து 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின கவனக்குறைவால் ஏற்பட்டதா?</u>

மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்ட மனுதாரர் தனது சாட்சியத்தில் தான் PY-01-AK-8016 என்ற இரு சக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றுகொண்டிருந்தபோது, 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான PY-01-BE-1865 என்ற காரை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஒட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக தனது சாட்சியத்தை முன்வைத்துள்ளார். மேற்கண்ட சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்திருந்தபோதிலும் அவரது சாட்சியத்தை 2ம் எதிர்மனுதாரரால் குலைக்க இயலவில்லை. அதோடு மேற்படி கார் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்பதாக 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேற்கண்ட அனைத்து பொருண்மைகளையும் ஒன்றிணைத்து பரிசீலனை செய்கையில் இவ்வழக்கு விபத்தானது PY-01-BE-1865 என்ற கார் ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டுள்ளதென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

(ஆ) மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? இழப்பீடு பெறத்தக்கவரெனில் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர்?

7. இவ்வழக்கு விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு காரணமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வந்துள்ளதால் மேற்படி விபத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிர்ணயம் செய்யப்படும் இழப்பீட்டைப் பெற மனுதாரர் உரிமை உள்ளவரென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மனுதாரர் எந்தெந்த தலைப்புகளின் கீழ் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர் என்பது குறித்து இந்நீதிமன்றத்தின் முடிவு பின்வருமாறு:

(i) பகுதி நிரந்தர ஊனத்திற்காக:

8. மனுதாரருக்கு விபத்தில் வலதுதொடை எலும்பிலும், வலதுகால் முட்டிக்குக்கீழ் உள்ள எலும்பிலும் எலும்புமுறிவுகள் ஏற்பட்டு 15 நாட்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவைசிகிச்சை செய்யப்பட்டு உள்உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளதென்பது மனுதாரர் தரப்பு 5, 6 சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ள விடுவிப்புச்சான்றுகளிலிருந்து தெளிவாகிறது. மனுதாரர் மருத்துவக்குழு முன்பு முன்னிலையாகி பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு மருத்துவக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற சான்றாவணமான மருத்துவச் சான்றிதழை பரிசீலினை செய்ததில் மனுதாரருக்கு **8%** ஊனம் ஏற்பட்டுள்ளதாக முடிவிற்கு வந்துள்ளது புலனாகிறது. வலதுதொடை எலும்பிலும், வலதுகால் முட்டிக்குக்கீழ் உள்ள எலும்பிலும் எலும்புமுறிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில் 44 வயது நிரம்பிய ஒரு நபர் கட்டாயம் தாங்கமுடியாத வலிக்கும் வேதனைக்கும் இயலாமைக்கும் ஆளாகியிருப்பார் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. ஆகவே அவருக்கு அளிக்கப்பட்ட ஊனத்தின் அளவு சரியான ஒன்றேயென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. **2013(2) TNMAC 583** என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்புநெறியில் 1% ஊனத்திற்கு ரூ.3,000/- என கணக்கிட்டு இழப்பீடு வழங்க வேண்டுமென நெறியுறுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், மேற்கண்ட தீர்ப்புரை பகரப்பட்டு 9 ஆண்டுகள்

ஆனதாலும் வாழ்வதற்கான செலவீனங்கள் தற்போது அதிகரித்துள்ளதாலும் 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் விபத்து ஏற்பட்டிருந்தால் 1% ஊனத்திற்கு ரூ.4,000/- வீதமும் 2016ம் ஆண்டிற்குப் பிறகு விபத்து ஏற்பட்டிருந்தால் மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.5,000/- வீதமும் இழப்பீட்டை அதிகரித்து வழங்கலாமென **"CMA 4645/2019 – M. Chinnathambi Vs S. Deepa & another, dated 10.01.2020"** என்ற முன்தீர்ப்புநெறியில் தெளிவாக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கு விபத்தானது **06.10.2010** அன்று நடந்துள்ளதால் மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்திற்கு ஒரு சதவிகிதத்திற்கு **ரூ.3,000/-** வீதம் **8%** ஊனத்திற்கு **ரூ.24,000/-ஐ** நிரந்தர ஊனத்திற்காக என்ற வகையில் இழப்பீடாக வழங்கலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

<u>**(ii)** வலி மற்றும் வேதனைக்காக:</u>

9. 44 வயது நிரம்பிய மனுதாரருக்கு வலதுதொடை எலும்பிலும், வலதுகால் முட்டிக்குக்கீழ் உள்ள எலும்பிலும் எலும்புமுறிவுகள் ஏற்பட்டு 15 நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்ற போதும் அதன்பிறகு அவருக்கு முழுமையாக நலமாகும் வரையிலும் அவர் தாங்கமுடியாத வலிக்கும் வேதனைக்கும் ஆளாகியிருப்பாரென்பதில் எவ்வித ஐயமுமில்லை. **அதுவும் குறிப்பாக தொடை எலும்பு முறிந்துள்ள நிலையில் இயற்கை உபாதையைக் கழிக்கும் பொழுதும் படிகளில் ஏறும்பொழுதும், பயணம் செய்யும்பொழுதும், சாதாரணமாக நடக்கும்பொழுதும் அவர் மிகுந்த வலிக்கும் வேதனைக்கும் ஆளாகியிருப்பாரென்பதில் எவ்வித ஐயமுமில்லை.** எதிர்பாராத விபத்தில் திடீரென பலத்த காயம் ஏற்பட்டு அதனால் அவருக்கு ஏற்பட்ட வலியை மற்ற எந்தவொரு நபரும் புரிந்துகொள்ள இயலாது. அந்த வலியைப் பணத்தால் ஈடு செய்யவும் இயலாது. ஆகவே மனுதாரருக்கு உண்டான வலி மற்றும் வேதனைக்காக அவருக்கு **ரூ.75,000/-**ஐ இழப்பீடாக வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

(iii) கூடுதல் ஊட்டச்சத்து:

10. 44 வயது நிரம்பிய மனுதாரருக்கு வலதுதொடை எலும்பிலும், வலதுகால் முட்டிக்குக்கீழ் உள்ள எலும்பிலும் ஏற்பட்ட எலும்புமுறிவுகள் முழுமையாக குணமாகி சாதாரண வேலைகளைச் செய்யும் நிலைக்கு ஆளாக குறைந்தபட்சம் 8 மாதங்களாவது ஆகியிருக்கும் என்ற வகையிலும் எப்படி எடுத்துக்கொண்டாலும் குறைந்தபட்சம் மனுதாரரின் ஊட்டச்சத்திற்காக 2010ம் ஆண்டில் ரூ.12,000/- செலவாகியிருக்கும். ஆகவே மனுதாரரின் ஊட்டச்சத்து செலவிற்காக **ரூ.12,000/-ஐ** இழப்பீடாக வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

(iv) உதவியாளர் கட்டணம்:

11. 44 வயது நிரம்பிய மனுதாரர் மொத்தம் 15 நாட்கள் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளார். அவ்வாறு சிகிச்சை பெற்றபொழுது அவரைப் பார்த்துக் கொள்ள ஒருவர் மாற்றி ஒருவர் ஒரு நாளைக்கு கட்டாயம் 2 நபர்கள் தேவைப்பட்டிருப்பர். அவ்வாறான சமயங்களில் அவரது உறவினர்களே அவரைக் கவனித்துக் கொண்டிருந்தாலும் தங்களது வேலைக்குச் செல்லாமல் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். அந்நபர்கள் கூலி வேலைக்கு செல்பவர்களாகவே இருந்தாலும் 2010ம் ஆண்டில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு **ரூ.200** வீதம் 2 நபர்களுக்கு 15 நாட்களுக்கு **ரூ.6,000** வருமான இழப்பு ஏற்பட்டிருக்கும். அதன்பிறகு அவருக்கு ஏற்பட்ட எலும்புமுறிவுகள் முழுமையாக குணமாக குறைந்தது 8 மாதங்களாவது ஆகியிருக்கும். மேற்கண்ட காலம் முழுவதும் கட்டாயமாக அவரது உறவினர்களே அவரை கவனித்துக்கொண்டிருந்திருப்பார்கள் என்ற போதிலும் அவர்களும் தங்களது வேலையை விட்டு முழு நேரப் பணியாகவோ அல்லது பகுதிநேரப்பணியாகவோ இப்பணியைச் செய்திருப்பார்கள். அதன் மூலம் மனுதாரரின் குடும்பத்திற்கு குறைந்தபட்சம் **ரூ.20,000/-** இழப்பு ஏற்பட்டிருக்கும். ஆகவே மனுதாரர் மருத்துவமனையில் இருந்த சமயமும் அதன்பிறகு முழுமையாக அவர் குணமாகும் வரையிலும் அவருக்கு உதவியாளராக இருந்ததற்கான

செலவிற்காக **ரூ.26,000/-ஐ** இழப்பீடாக வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

(v) பயணச் செலவு:

12. விபத்து ஏற்பட்ட சமயத்திலிருந்து முழுமையாக குணமாகும்வரை மருத்துவமனைகளுக்கு பலமுறை மனுதாரர் சென்று வந்திருப்பார். அதுவும் தொடை எலும்பில் எலும்புமுறிவு ஏற்பட்ட மனுதாரர் காரிலேயே மருத்துவமனைக்கு சென்று வந்திருக்க முடியும். ஆகவே அவரது பயணச் செலவிற்காக வேண்டி **ரூ.5,000/-** ஐ இழப்பீடாக வழங்கலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

(vi) மருத்துவச் செலவு:

13. மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவச் செலவுகளை நிரூபிக்க ஏதுவாக எவ்வித ஆவண சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருந்தபோதிலும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு குணமாகும்வரை குறைந்தபட்சம் ரூ.5,000/-மாவது மருந்து மாத்திரைகளுக்கு செலவாகியிருக்கும். ஆகவே மனுதாரருக்கு மருத்துவச் செலவு என்ற வகையில் **ரூ.5,000/-**ஐ இழப்பீடாக வழங்கலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

(vii) வருங்கால மருத்துவசெலவு:

14. மனுதாரர் சாட்சியத்தையும் மருத்துவ ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு உள்உபகரணங்கள் பொறுத்தப்பட்டு அறுவைசிகிச்சை செய்யப்பட்டுள்ளது புலனாகிறது. மேற்கண்ட உள்உபகரணங்களை எப்படியாயினும் அகற்றவேண்டியது அவசியமாகும். மேற்கண்ட உள் உபகரணங்கள் இதுநாள்வரையில் அகற்றப்பட்டதாக எவ்வகையிலும் புலனாகவில்லை. அந்த உள்உபகரணங்களை அறுவைசிகிச்சை செய்து அகற்ற குறைந்தபட்சம் ரூ.20,000/- அவசியம்

செலவாகும். ஆகவே வருங்கால மருத்துவச்செலவு என்ற வகையில் மனுதாரருக்கு **ரூ.20,000-ஐ** இழப்பீடாக வழங்கலாமென இந்நீதிமன்றம் முவழங்டிவிற்கு வருகிறது.

(viii) வருமான இழப்பு:

15. மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்புமுறிவுகள் முழுமையாக குணமாகி அவர் தனது அன்றாட வேலைகளைச் செய்வதற்கு குறைந்தது 8 மாதங்களாவது ஆகியிருக்கும். விபத்து சமயம் மனுதாரர் கொத்தனாராக வேலை பார்த்து மாதம் ரூ.15,000 சம்பாதித்து வந்ததாக மனுதாரரால் உரைக்கப்பட்டுள்ளதே தவிர அக்கூற்றை உரிய ஆவண சாட்சியங்களின் மூலம் நிரூபிக்க மனுதாரர் தரப்பில் எவ்வித முன்முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இருந்தபோதிலும் 44 வயதான ஒரு ஆண் தனது குடும்பத்தை நடத்த குறைந்தபட்சம் 2010ம் ஆண்டில் தினம் ரூ.250ஆவது சம்பாதித்து வந்திருக்க வேண்டும். மாதம் 25 நாட்கள் அவர் வேலைக்கு செல்லும்பட்சத்தில் மாதமொன்றுக்கு சுமார் **ரூ.6,250**மாவது சம்பாதித்து வந்திருப்பார். ஆகவே மனுதாரருக்கு வருமான இழப்பு என்ற வகையில் **ரூ.50,000/-ஐ (8 X ரூ.6,250/-)** இழப்பீடாக வழங்கலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

16. மேற்கண்ட அனைத்து பொருண்மைகளையும் கருத்திற்கொண்டு மனுதாரருக்கு கீழ்க்கண்ட வகையில் இழப்பீடு வழங்கலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

பகுதி நிரந்தர ஊனத்திற்காக:	ரூ.	24,000.00
வலி மற்றும் வேதனைக்காக:	ரூ.	75,000.00
கூடுதல் ஊட்டச்சத்து:	ரூ.	12,000.00
உதவியாளர் கட்டணம்:	ரூ.	26,000.00
பயணச் செலவு:	ரூ.	5,000.00
மருத்துவச் செலவு:	ரூ.	5,000.00

வருங்கால மருத்துவச் செலவு:	ரூ.	20,000.00
வருமான இழப்பிற்காக:	ரூ.	50,000.00
மொத்தம்	**ரூ.**	**2,17,000.00**

17. <u>மனுதாரருக்கு எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர்?</u>

வழக்கு விபத்தில் சம்மந்தப்பட்ட 1-ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் 2-ஆம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்படவில்லையென்றோ, 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிமுறைகளை மீறி நடந்ததாகவோ 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எதிர்வாதமும் முன்வைக்கப்படவில்லை. ஆகவே மனுதாரருக்கு செலுத்தவேண்டிய இழப்பீட்டுத் தொகையை 1ம் எதிர்மனுதாரருக்காக வேண்டி 2ம் எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவரென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

18. ஆகவே இறுதியாக மனுதாரருக்கு **ரூ.2,17,000/-த்தை** இழப்பீடாக வழங்கவும் மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்த **09.09.2020** முதல் தொகையை வைப்பீடு செய்யும் தேதிவரை, ஆண்டொன்றிற்கு 5.5% வட்டி வழங்கவும் வழக்குரைஞர் கட்டணம் மற்றும் நீதிமன்ற கட்டணத்திற்கான தொகையை செலவுத் தொகையாக வழங்கவும் 2ம் எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது. இம்மனு மனுதாரரின் தவறுகையால் **14.02.2022 முதல் 15.03.2022** வரை தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததால் தள்ளுபடியான காலத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் வட்டி செலுத்தத் தேவையில்லையென ஆணையிடப்படுகிறது**.** வருங்கால மருத்துவ செலவிற்காக நிர்ணயம் செய்யப்பட்ட இழப்பீட்டு தொகையான ரூ.20,000க்கு இன்றிலிருந்து வட்டி செலுத்தினால் போதுமானதென ஆணையிடப்படுகிறது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் நிரந்தர வைப்பீட்டிற்கு தற்போது வழங்கப்படும் வட்டி விகிதத்தை கருத்தில்கொண்டு 5.5% வட்டி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கான இழப்பீட்டுத் தொகையை 1 மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென 2ம்

எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது. அவ்வாறு வைப்பீடு செய்யப்படாத பட்சத்தில் மேற்கண்ட இழப்பீட்டுத் தொகையை ஆண்டொன்றிற்கு 7.5% வட்டியுடன் செலுத்த ஆணையிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகையை இந்தியன் வங்கி கணக்கு எண்: 6490404624, IFSC Code: IDIB000M054 ல் செலுத்த ஆணையிடப்படுகிறது. **தொகை செலுத்தப்பட்ட விபரத்தை தீர்ப்பாயத்தின் pdymact-py@indiancourts.nic.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்ப ஆணையிடப்படுகிறது.** விபத்து ஏற்பட்டு சுமார் 11 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளதால் மேலும் இழப்பீட்டுத் தொகையை நிரந்தர வைப்பீடு செய்து மனுதாரரை தொடர்ந்து அலைக்கழிக்க வேண்டாமென்பதால் நீதியின் நலன் கருதி தொகை முழுவதையும் உடனடியாக எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.இவ்வழக்கில் நீதிமன்ற கட்டணமாக **ரூ.1,543/-** நிர்ணயம் செய்யப்படுகிறது. ஏற்கனவே இவ்வழக்கில் **ரூ.10/-** நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதால் இன்னும் **ரூ.1,533/-ஐ** நீதிமன்ற கட்டணமாக மனுதாரர் செலுத்த வேண்டும். வழக்குரைஞர் கட்டணமாக **ரூ.4,720/-** நிர்ணயம் செய்யப்படுகிறது. உத்தரவின் நகலை (இலவச நகல் உள்ளிட்ட) முழு நீதிமன்றக் கட்டணத்தையும் செலுத்தியபிறகு மனுதாரருக்கு அளிக்க ஆணையிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு ஏப்ரல் மாதம் 25-ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

P K SIVAKUMAR Digitally signed by P K SIVAKUMAR Date: 2022.04.25 17:38:17 +0530

(பெ.க. சிவக்குமார்)
நீதிபதி
கூடுதல் மோட்டார் வாகன
விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம்.
புதுச்சேரி

பின் இணைப்பு:

1. மனுதாரர்தரப்பு சாட்சிகள்:

ம.சா.-1	திரு. பரசுராமன்

2. மனுதாரர்தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:

ம.சா.ஆ.-1	06.10.2010	முதல் தகவலறிக்கை நகல்
ம.சா.ஆ.-2	07.09.2010	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.-3	26.08.2010	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டுச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.-4	30.08.2004	1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிம நகல்
ம.சா.ஆ.-5	18.10.2010	விடுவிப்புச் சீட்டு நகல்
ம.சா.ஆ.-6	06.10.2010	விபத்துப் பதிவேடு நகல்
ம.சா.ஆ.-7	06.10.2010	மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல்
ம.சா.ஆ.-8	13.04.2011	இறுதியறிக்கை நகல்
ம.சா.ஆ.-9	14.11.2011	ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.-10	10.04.1995	மனுதாரர் அமர்ந்து சென்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபரின் ஓட்டுநர் உரிம நகல்

3. எதிர்மனுதாரர்தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை.

4. நீதிமன்ற சான்றாவணம்:

நீ.சா.ஆ.-1	---	ஊனச்சான்றறிக்கை

P K SIVAKUMAR
Digitally signed by P K SIVAKUMAR
Date: 2022.04.25 17:38:26 +0530

(பெ.க. சிவக்குமார்)
நீதிபதி
கூடுதல் மோட்டார் வாகன
விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம்.
புதுச்சேரி